# பத்திரிக்கை செய்தி

## கட்டிட வரைப்பட அனுமதி வழங்க ரூ.35,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய நகர திட்டமிடல் ஆய்வாளர் மற்றும் உரிமம் பெற்ற கட்டிட சர்வேயர் (தனியார் நபர்), கைது

புகார்தாரர் திரு.நாகராஜ், ராஜீவ்நகர், அதானி ரோடு, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது மகள் சுஜன்யா என்பவர் புதிதாக கட்டிவரும் வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி வழங்க வேண்டி நகராட்சி நகர திட்டமிடல் அலுவலகம், சத்தியமங்கலம் அலுவலகம், ஈரோடு மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். புகார்தாரர் திரு.திணேஷ் உரிமம் பெற்ற கட்டிட சர்வேயர், (தனியார் நபர்) அவர்களை அனுகி கட்டணமான ரூ.10,000/-ம், பதிவு கட்டணமாக ரூ.2,500/-ம் மற்றும் மற்ற நகராட்சி கட்டணம் ரூ.55,370/-ம் செலுத்தியுள்ளார். திரு.பெரியசாமி, நகர திட்டமிடல் ஆய்வாளர், சத்தியமங்கலம் நகராட்சி ஈரோடு மாவட்டம் அவர்கள் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து புகார்தாரருக்கு கட்டிட அனுமதி வழங்க தங்களுக்கு ரூ.35,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஈரோடு மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 29.05.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பெரியசாமி, நகர திட்டமிடல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி திரு.திணேஷ் உரிமம் பெற்ற கட்டிட சர்வேயர், (தனியார் நபர்) அவர்கள் லஞ்ச பணம் ரூ.35,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

## TOWN PLANNING INSPECTOR AND LICENSED BUILDING SURVEYOR (PRIVATE PERSON) WERE ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE Rs.35,000/- TO ISSUE BUILDING PLAN APPROVAL

The complainant Tr.Nagaraj, is residing at Rajeev nagar, Athani Road, Sathyamangalam, Erode District. The complainant had applied building plan approval for constructing the house on the site belonging to his daughter Sujanya. Complainant had approached Tr.Dinesh, Licensed Building Surveyor of Sathyamanagalam Municipality (Private person). He had received Rs.10,000/- from the complainant towards his fees. He also received Rs.2,500/- towards registration and scrutiny fees and it was paid. Further he also received Rs.55,370/- towards making official payments to the Municipality and it was paid. Tr.Periyasamy, Town Planning Inspector, Sathyamangalam Municipality, Erode District was demanded bribe of Rs.35,000/- to issue building plan approaval. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Erode detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (29.05.2024). During trap proceedings, on the instructions of Tr.Periyasamy, Town Planning Inspector, Tr.Dinesh, Licensed Building Surveyor of Sathyamanagalam Municipality (Private person) received the bribe amount of Rs.35,000/- from the complainant. Both accused were arrested.